# நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

மானியக் கோரிக்கை எண் : 34

# அறிவிப்புகள்
# 2022 - 2023


**கே.என். நேரு**

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்

## தொலைநோக்குத் திட்டம்

சுத்தம், பசுமை, ஆரோக்கியச் சுற்றுச்சூழல், அடிப்படை வசதி, பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு, வறுமை நிலை அகற்றல் மற்றும் நகர்புற வளர்ச்சி போன்றவற்றில் வெளிப்படைத் தன்மையுடன் கூடிய பங்கேற்பு அணுகுமுறையைப் பின்பற்றுவதன் மூலமாக அனைவருக்கும் சிறந்த வாழ்க்கைத் தரத்தினை வழங்குவதற்கு வழிவகுத்தல்.

# நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் **56** புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**கே.என். நேரு**

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்

## 1. நகர்புரங்களில் சீர்மிகு ஆளுமை திட்டம் (Smart Governance System)

நகர்புரங்களில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் வழங்குவது நகர்புர உள்ளாட்சி அமைப்புகளின் கடமையாகும். இவற்றின் பணி மற்றும் சேவைகளை நிகர்நிலையில் கண்காணிக்கவும், பணிகள் குறித்த விபரங்களை மக்கள் தெரிந்து கொள்ளவும், பணி மற்றும் சேவை குறித்த மக்களின் கருத்துக்களை QR Code போன்ற செயலிகள் மூலம், நிகர்நிலையில் தெரிவித்திடவும் சிறப்பான சீர்மிகு ஆளுமை திட்டம் செயல்படுத்தப்படும். மக்கள் தெரிவிக்கும் கருத்தின் அடிப்படையில், நகரங்களின் தரக்குறியீடு (Star rating) நிர்ணயிக்கப்படும். இத்திட்டம் தெரிவு செய்யப்பட்ட நகர்புர உள்ளாட்சிகளில் ஒரு முன்னோடி திட்டமாக செயல்படுத்தப்படும்.

## 2. நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம் (People's Movement for Clean Cites)

அரசு, தனது வளர்ச்சிக்கான திட்டத்தில், நகரத் தூய்மைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. சுத்தமான, பசுமையான மற்றும் நீடித்த சுற்றுச்சூழலை உறுதிசெய்யும் பொருட்டு நகரங்களில், பெருமளவிலான மக்கள் பங்கேற்புடன், ஒவ்வொரு மாதமும் இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமைகளில் தீவிர தூய்மைப் பணிகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் (Cleanliness drive) நடத்தப்படும். இம்முகாம்களில் தன்னார்வ அமைப்புகள், குடியிருப்போர் நலச் சங்கங்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் பங்களிப்பு ஊக்கப்படுத்தப்படும்.

## 3. தூய்மை பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம் (Sanitary Workers' Empowerment)

நகரம் தூய்மையாக இருப்பதற்கு நாள்தோறும் அயராது உழைத்து வரும் தூய்மை பணியாளர்கள் மீது இவ்வரசு, மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. இவர்களின் வாழ்வினை மேம்படுத்தவும், பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக தூய்மை பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும். அவர்களுக்கான பல்வேறு அரசு நலத்திட்டங்களை ஒருங்கிணைத்து, பயன்பெறச் செய்யவும், அவர்களின் குழந்தைகள் முறையான கல்வி பெறுவதை உறுதி செய்யவும், இயந்திரமயமாக்கப்படும் தூய்மைப்பணியில் அவர்களுக்கு தேவையான திறன்பயிற்சிகளை வழங்கி, அவர்களை அப்பணியில் ஈடுபடுத்தவும், விருப்பத்தின் அடிப்படையில் அவர்களுக்கு மாற்றுத்தொழில் தொடங்கவும், வங்கிகள் மூலம் சிறு கடன் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 4. சாலையோர வியாபாரிகளுக்கான நலத்திட்டம் (Street Vendors' Welfare)

தகுதியான சாலையோர வியாபாரிகளின் சமூகபாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட, நடப்பாண்டில் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அடையாள அட்டை வழங்கப்பட்டு, அவர்கள் எவ்வித சிரமும் இன்றி வியாபாரம் செய்வதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்படும்.

## 5. நகர்புரங்களில் வார்டுகுழு மற்றும் பகுதி சபை உருவாக்குதல் (Area sabha and Ward Committee)

நகர்புரங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளோடு மாமன்றங்கள் தற்போது நிர்வாகம் செய்ய தொடங்கி விட்டன.

அதேபோல நிர்வாகத்தில் மக்களின் பங்களிப்பினை விரிவுபடுத்தும் விதமாக நகர்புரங்களில் வார்டு குழு (Ward Committee) மற்றும் பகுதி சபை (Area sabha) உருவாக்கப்படும்.

இந்த பகுதி சபைகள் மற்றும் வார்டு குழுக்கள் காலாண்டுக்கு ஒரு முறை கூடி, தமது பகுதி மற்றும் வார்டு அளவில் தேவைப்படும் வசதிகளை பரிசீலித்து மாமன்றம் மூலம் செயல்படுத்திட நடவடிக்கை எடுக்கும்.

## 6. புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் மக்கள் பிரதிநிதிகளுக்கும் பயிற்சி அளித்தல்.

பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 489 பேரூராட்சிகளின் மக்கள் பிரதிநிதிகளாக 12,819 பேர் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.

இவர்களுக்கு உள்ளாட்சி நிர்வாகம், நிதி மேலாண்மை போன்றவற்றில் அடிப்படை பயிற்சி அளிக்கப்படும்.

## 7. தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான பொது சட்டம்

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் தனித்தனி சட்டங்களால் தற்போது நிர்வகிக்கப்படுகிறது அனைத்து நகர்ப்புர உள்ளாட்சிகளையும் ஒருங்கிணைத்து ஒரே சட்டமாக "தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சிகள் சட்டம்" கொண்டு வரப்படும்.

## 8. மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் ரூ 1856.83 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டப்பணிகள்

31 நகராட்சிகள் மற்றும் 112 பேரூராட்சிகளில் குடிநீர் திட்டப் பணிகள் ரூ 1,856.83 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

## 9. ஆவடி மற்றும் காஞ்சிபுரம் மாநகராட்சிகளில் குடிநீர் திட்டப் பணிகள்.

ஆவடி மற்றும் காஞ்சிபுரம் மாநகராட்சிகளின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு விடுபட்ட பகுதிகளில் பகிர்மான குழாய் மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டி பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 10. 100 சதவீகித பாதாளச் சாக்கடை திட்டம் விரிவுபடுத்துதல்

திருப்பூர், வேலூர், திண்டுக்கல், நாகர்கோவில், காஞ்சிபுரம், கடலூர் மற்றும் ஆவடி ஆகிய மாநகராட்சிகள், காரைக்குடி, திருவண்ணாமலை, புதுக்கோட்டை, நாமக்கல், தேனி – அல்லிநகரம், மயிலாடுதுறை, திருவாரூர், பழனி, திருவேற்காடு, மாங்காடு மற்றும் பூந்தமல்லி ஆகிய நகராட்சிகளில் விடுபட்ட பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

## 11. விரிவாக்கப்பட்ட தாம்பரம் மாநகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல் மற்றும் பாதாளச்சாக்கடை திட்டம்

தரம் உயர்த்தப்பட்ட தாம்பரம் மாநகராட்சி பகுதி முழுமைக்கும் (விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகள் உட்பட) குடிநீர் வழங்கல் மற்றும் பாதாளச்சாக்கடை திட்டத்தினை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

## 12. பாதாளசாக்கடை திட்ட செயலாகத்திற்கான ஆய்வு பணிகள் மேற்கொள்ளுதல்.

குன்றத்தூர் நகராட்சி மற்றும் அதனை சுற்றியுள்ள 20 கிராம ஊராட்சிகள், நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி மற்றும் அதனை சுற்றியுள்ள 4 கிராம ஊராட்சிகளில் பாதாளச்சாக்கடை திட்டம் செயல்படுத்தப் படுவதற்கான ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

## 13. கசடுகழிவு மேலாண்மை திட்டங்கள்

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 36 நகரங்களில் கசடு கழிவு மேலாண்மை செயலாக்கத்திற்கு ரூ 87 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்படும்.

## 14. மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் குளங்கள் சீரமைப்பு பணிகள்

நடப்பாண்டில் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் 100 குளங்கள் ரூ 75 கோடி மதிப்பீட்டிலும், பேரூராட்சி களில் 112 நீர்நிலைகள் ரூ 63.53 கோடி மதிப்பீட்டிலும் சீரமைக்கப்படும்.

## 15. சமுதாய மற்றும் பொது கழிப்பிடங்கள் புதியதாக கட்டுதல் மற்றும் மேம்படுத்துதல்

சுகாதார கட்டமைப்பினை உறுதி செய்திட சென்னை மாநகராட்சி மண்டலம் 5,6 மற்றும் 9 இல் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் அனைத்து கழிப்பறைகளையும் பராமரிக்கவும், தேவைப்படின், புதிய கழிப்பறைகளை கட்டி பராமரிக்கவும் ரூ 221 கோடி மதிப்பீட்டில் ஒரு முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்படும்.

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 110 புதிய கழிப்பறைகள் ரூ 27.21 கோடி மதிப்பீட்டிலும், 500 பழைய கழிப்பிடங்கள் ரூ 25 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கவும், மேலும் பேரூராட்சிகளில் 100 புதிய கழிப்பிடங்கள் ரூ 22.50 கோடி மதிப்பீட்டிலும், 200 பழைய கழிப்பிடங்கள் ரூ 10 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 16. பழைய தேக்க திடக்கழிவினை அகற்றுதல்

இரண்டு மாநகராட்சிகள் மற்றும் 10 நகராட்சிகளில் 3.64 இலட்சம் கனமீட்டர் தேக்க திடக்கழிவுகள் ரூ 28.77 கோடி மதிப்பீட்டிலும், 33 பேரூராட்சிகளில் தேக்க திடக்கழிவுகள் ரூ 22.10 கோடி மதிப்பீட்டிலும் பயோமைனிங் முறையில் அகற்றப்படும்.

## 17. பூங்காக்கள் மேம்படுத்துதல் மற்றும் நகர்புர பசுமை பகுதிகளை உருவாக்குதல்

நகர்புரங்களை பசுமையாக்கி, இயற்கை சூழலை மேம்படுத்த, பெருநகர சென்னை மாநகராட்சியில் ரூ 50 கோடி மதிப்பீட்டில் 150 திறந்தவெளி பூங்காக்களும், ஏனைய மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் ரூ 100 கோடி மதிப்பீட்டில் 200 பூங்காக்களும், பேரூராட்சிகளில் ரூ 25.58 கோடி மதிப்பீட்டில் 165 பூங்காக்கள் அமைக்கப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 100 திறந்தவெளி ஒதுக்கீட்டு இடங்களிலும் மற்றும் 124 நகர்புர உள்ளாட்சி அமைப்புகளில், பயோமைனிங் மூலமாக மீட்கப்பட்டுள்ள 369 ஏக்கர் நிலத்திலும் மரங்கள் நட்டு "பசுமை பகுதிகள்" உருவாக்கப்படும்.

## 18. மண் சாலைகளை மேம்பாடு செய்தல்

மண் சாலைகளை அனைத்து பருவ காலத்திற்கும் பயன்படுத்தும் விதத்தில், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 500 கி.மீ மண் சாலைகள் ரூ 350 கோடி மதிப்பீட்டிலும்

அதேபோல, பேரூராட்சிகளில், 500 கி.மீ மண் சாலைகள் ரூ 350 கோடி மதிப்பீட்டிலும் தார்சாலை, கான்கிரீட் அல்லது பேவர்பிளாக் சாலைகளாக மாற்றப்படும்.

## 19. பழுதடைந்த சாலைகளை மேம்பாடு செய்தல்

சென்னை மாநகராட்சியில் ரூ 400 கோடி மதிப்பீட்டிலும், ஏனைய மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் ரூ 275 கோடி மதிப்பீட்டிலும், மழைவெள்ளம், குடிநீர் மற்றும் பாதாளச்சாக்கடை திட்டப்பணிகளால் பழுதடைந்த சாலைகள் மேம்படுத்தப்படும்.

## 20. நவீன எரிவாயு தகன மேடை அமைத்தல்

அனைத்து நகர்புர உள்ளாட்சிகளிலும் ஒரு நவீன எரிவாயு தகன மேடை அமைக்கப்பட வேண்டும் என்ற தொலைநோக்கு பார்வையினை கருத்திற் கொண்டு நடப்பாண்டில்,

பெருநகர சென்னை மாநகராட்சியில் ரூ 30 கோடி மதிப்பீட்டில் 20 தகன மேடைகள் எரிவாயு தகன மேடைகளாக மாற்றப்பட்டு, மயானபூமிகள் மேம்படுத்தப்படும்

பிற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் ரூ 67.50 கோடி மதிப்பீட்டில் 35 புதிய நவீன தகன மேடைகள் அமைக்கப்படும்.

மேலும், ரூ 10 கோடி மதிப்பீட்டில் 20 தகன மேடைகள் புதுப்பிக்கப்படும்.

பேரூராட்சிகளில் 50 மின் மயானங்கள், ரூ 75 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

## 21. சந்தைகள் அமைத்தல் / புதுப்பித்தல்

கோயம்புத்தூர், ஓசூர், மதுரை, கடலூர், கரூர் ஆகிய மாநகராட்சிகளிலும் விருத்தாசலம், ராணிப்பேட்டை, சிவகங்கை, சோளிங்கர், திருவண்ணாமலை, அரக்கோணம், இடங்கனசாலை, திருச்செங்கோடு, ராசிபுரம், பள்ளபட்டி, புகளூர், பட்டுக்கோட்டை, மன்னார்குடி, புதுக்கோட்டை, அரியலூர், பொள்ளாச்சி, தாராபுரம், கோபிசெட்டிபாளையம், நெல்லியாளம், கூடலூர்,பழனி, ஒட்டன்சத்திரம், சங்கரன்கோவில், கோவில்பட்டி, திருச்செந்தூர், விருதுநகர், ஸ்ரீவில்லிபுத்தூர், தேவகோட்டை, முசிறி, துறையூர் மற்றும் மணப்பாறை ஆகிய நகராட்சிகளிலும் 53 புதிய சந்தைகள் ரூ 259.35 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும். மேலும், கோயம்புத்தூர், காஞ்சிபுரம், திருச்சி, கடலூர் ஆகிய மாநகராட்சிகளிலும் உதகமண்டலம், மானாமதுரை, ராமேஸ்வரம் ஆற்காடு, அரியலூர் ஆகிய நகராட்சிகளிலும் ரூ 41.20 கோடி மதிப்பீட்டில் 13 சந்தைகள் மேம்படுத்தப்படும்.

மண்ணச்சநல்லூர், மேட்டுப்பாளையம், ச.கண்ணனூர், உடையார்பாளையம், காடையாம்பட்டி, வேலூர், கன்னிவாடி, திருக்காட்டுப்பள்ளி, சென்னிமலை, பாப்பாரப்பட்டி ஆகிய 10 பேரூராட்சிகளில் **10 சந்தைகள் ரூ 25.85 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

## 22. அனைத்து கட்டமைப்புகளுடன் பேருந்து நிலையங்கள் அமைத்தல்

பெருநகர சென்னை மாநகராட்சியில் பிராட்வே பஸ் நிலையத்தில் பல்நோக்கு ஒருங்கிணைந்த போக்குவரத்து பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

திருப்பூர், ஓசூர் ஆகிய மாநகராட்சிகள், திருவள்ளூர், வடலூர், சிதம்பரம், பேர்ணாம்பேட்டை, பட்டுக்கோட்டை, வேதாரண்யம், லால்குடி, துறையூர், அரியலூர், பொள்ளாச்சி, ஆற்காடு, மேலூர், உசிலம்பட்டி, கூடலூர், ராமநாதபுரம், திருச்செந்தூர், சாத்தூர், கொளச்சல், மேட்டூர், எடப்பாடி ஆகிய நகராட்சிகளிலும் மற்றும் சாயர்புரம், திருவட்டார் ஆகிய பேரூராட்சிகளிலும் 24 புதிய பேருந்து **நிலையங்கள் ரூ 302.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

மேலும், மதுரை மாநகராட்சி, சிதம்பரம், வாலாஜாபேட்டை, கூத்தாநல்லூர், முசிறி,

ஜெயங்கொண்டம், கோபிசெட்டிபாளையம், தேவக்கோட்டை, மானாமதுரை, பழனி, கொடைக்கானல், ராமேஸ்வரம், பெரியகுளம், களக்காடு, அருப்புக்கோட்டை, இராஜபாளையம், ஆத்தூர், தர்மபுரி, குளித்தலை, பள்ளப்பட்டி ஆகிய நகராட்சிகள் மற்றும் கயத்தாறு, ஆத்தூர், ஊத்தங்கரை, மல்லசமுத்திரம், திருக்கழுக்குன்றம், காட்டுமன்னார்கோவில், பேரையூர், வி.புதூர் ஆகிய பேரூராட்சிகளில் **31 பழைய பேருந்து நிலையங்கள் ரூ 53.59 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

## 23. அலுவலக கட்டடங்கள்

தரம் உயர்த்தப்பட்ட தாம்பரம், காஞ்சிபுரம் மாநகராட்சிகளுக்கு புதிய அலுவலக கட்டடங்களும், கும்பகோணம் மாநகராட்சிக்கு கூடுதல் அலுவலக கட்டடமும் ரூ 17 கோடி மதிப்பீட்டிலும்

தரம் உயர்த்தப்பட்ட புதிய 28 நகராட்சிகளில் புதிய அலுவலக கட்டடம் அல்லது கூடுதல் அலுவலக கட்டடம் ரூ 75.50 கோடி மதிப்பீட்டிலும்

10 பேரூராட்சி அலுவலக கட்டடங்கள் ரூ 10 கோடி மதிப்பீட்டிலும் புதியதாக அமைக்கப்படும்.

## 24. நூலகம் மற்றும் அறிவுசார் மையம்

3 மாநகராட்சி மற்றும் 22 நகராட்சிகளில் நூலகம் மற்றும் அறிவுசார் மையங்கள் ரூ 62.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

## 25. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும பகுதிகளிலுள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் மழைநீர் வடிகால் ரூ 82.15 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளுதல்

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும பகுதியில் உள்ள ஆவடி, தாம்பரம் ஆகிய மாநகராட்சிகள் மற்றும் குன்றத்தூர், மாங்காடு, திருவேற்காடு ஆகிய நகராட்சி பகுதிகளிலும் ஏற்படும் வெள்ளபாதிப்பினை தவிர்க்க ரூ 82.15 கோடி மதிப்பீட்டில் 30 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## 26. பனைமரத்துப்பட்டி ஏரியைச் சுற்றியுள்ள கிராமங்கள் மற்றும் நகரங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள்

சேலம் மாநகராட்சிக்குட்பட்ட 2137.92 ஏக்கர் பரப்பளவும், 168.128 மில்லியன் கன அடி கொள்ளவும் கொண்ட பனைமரத்துப்பட்டி ஏரியின் நீரினை சுற்றியுள்ள கிராமங்கள் மற்றும் நகரங்களுக்கு குடிநீராக வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும்.

## 27. குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம்

நகர்புர உள்ளாட்சிகளில் நாள்தோறும் 14,000 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் உற்பத்தி ஆகின்றன. இதில் சுமார் 50 சதவீதம் ஈர கழிவுகளாகவும் எஞ்சியவை உலர் கழிவுகளாகவும் இருக்கின்றன. சென்னையில் 600 மெட்ரிக் டன் அளவிலும், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் தலா 200 மெட்ரிக் டன் அளவிலும் குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டங்கள் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

## 28. சாலை மேம்பாட்டு பணிகள்

விவசாய விளைபொருட்களை நகர் பகுதிகளில் சந்தைப்படுத்த ஏதுவாக நபார்டு திட்டத்தின் கீழ் ரூ 200.70 கோடி மதிப்பீட்டில் பேரூராட்சிகளில் சாலை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 29. அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம்

பேரூராட்சிகளில் 11,253 வீடற்ற ஏழைகளுக்கு, அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் வீடு ஒன்றிற்கு ரூபாய் 2.10 இலட்சம் வீதம் ரூ 236.31 கோடி மானியமாக வழங்கப்படும்.

## 30. சென்னையில் உயர்மட்ட பாலங்கள் மற்றும் புதிய மேம்பாலம்

பெருநகர சென்னை மாநகராட்சியில் கூவம் ஆற்றின் குறுக்கே யூனியன் சாலையையும், பூந்தமல்லி நெடுஞ்சாலையையும் இணைக்கும் வகையில் சின்ன நொளம்பூர் மற்றும் ஓம் சக்தி நகர் ஆகிய இடங்களில் 2 உயர்மட்ட பாலங்கள் ரூ 120 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்

கொருக்குப்பேட்டையில் உள்ள மணலி சாலையில் 2B இரயில்வே சந்திக்கடவில் ரூ 105 கோடி மதிப்பீட்டில் புதிய மேம்பாலம் அமைக்கப்படும்.

வள்ளுவர் கோட்டம் சந்திப்பில் வாகன நெரிசலை குறைப்பதற்காக ரூ 98 கோடி மதிப்பீட்டில் புதிய மேம்பாலம் அமைக்கப்படும்.

மேலும் ஜீவன் நகரில் ரூ 4 கோடி மதிப்பீட்டில் மற்றும் கீழ்பாக்கம் தோட்டத்தில் உள்ள ஆஸ்பரின் சாலையில் ரூ 7 கோடி மதிப்பீட்டில் இரண்டு பாலங்கள் அமைக்கப்படும்.

## 31. சென்னையில் மழைநீர் வடிகால்

சென்னை மாநகரில் மழைநீர் தேங்குவதை தடுக்கும் பொருட்டு கொசஸ்தலையாறு வடிநிலப்பகுதியில் ரூ 3,220 கோடி மதிப்பீட்டிலும், கோவளம் வடிநிலப் பகுதியில் ரூ 1,714 கோடி மதிப்பீட்டிலும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. ஏனைய பகுதிகளில் ரூ 400.63 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நிதி ஆதாரங்களை ஒருங்கிணைத்து மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது கூடுதலாக, ரூ 291 கோடி மதிப்பீட்டில் புதிதாக மழைநீர் வடிகால்கள் அமைத்தல் மற்றும் தற்போதுள்ள மழைநீர் வடிகால்களை மேம்படுத்தும் பணிகள் தமிழ்நாடு அரசின் வெள்ளத்தடுப்பு பணிக்காக ஒதுக்கப்பட்ட சிறப்பு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

## 32 சென்னையில் பள்ளிக்கட்டடங்கள் மேம்படுத்துதல்

பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிக்கட்டடங்களை மேம்படுத்துல் மற்றும் மாணாக்கர்களுக்கான மேசை, நாற்காலி முதலிய தளவாடங்கள் வாங்குதல் ஆகிய பணிகள் ரூ 60 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

## 33 சென்னையில் நாய் இனக்கட்டுப்பாட்டு மையங்கள்

பெருநகர சென்னை மாநகராட்சியில் 3 இடங்களில் நாய் இனக்கட்டுப்பாட்டு மையங்கள் மற்றும் நாய்களுக்குண்டான எரியூட்டும் மயான வசதி ரூ 20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

## 34 பெருநகர சென்னை மாநகராட்சி தூய்மைப் பணிக்கான இயந்திரங்கள் கொள்முதல்

மழைகாலங்களில் வெள்ள நீரை வெளியேற்ற ஒரு ஆம்பிபியன் வாகனம் மற்றும் நீர்வழி தடங்களை சுத்தப்படுத்த 2 ரோபோடிக் எஸ்கவேட்டர்கள் மற்றும் சாலைகளை தூய்மைப்படுத்தும் 8 இயந்திரப் பெருக்கிகள் ரூ 25.50 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

## 35. சென்னையில் விளையாட்டுத்திடல்கள்

பெருநகர சென்னை மாநகராட்சியில் 50 எண்ணிக்கையிலான விளையாட்டுத் திடல்கள் புதிதாக அமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணி ரூ 50 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

## 36. சென்னையை அழகுபடுத்தும் பணி

பெருநகர சென்னை மாநகராட்சியில் மேம்பாலங்களின் கீழ்பகுதிகளில் செயற்கை நீருற்று மற்றும் வண்ண விளக்குகள் அமைத்து மற்றும் பசுமையாக்கி அழகு படுத்தும் பணி ரூ 25 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

## 37. சென்னை கடற்கரைகளில் மர நடைபாதை

சென்னை மெரீனா கடற்கரையில் மாற்றுத்திறனாளிகளுக்கு நிரந்தர மர நடைபாதை அமைக்கப்பட உள்ளவாறு, பெசன்ட் நகர் கடற்கரையில் கடலுக்கு அருகில் செல்வதற்கு ஏதுவாக ரூ 1 கோடி மதிப்பீட்டில் மர நடைபாதை அமைக்கப்படும்.

## 38. பெருநகர சென்னை மாநகராட்சி – சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிக்கு ஏற்றவாறு மறு சீரமைப்பு

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 22 சட்டமன்ற தொகுதி அடிப்படையில் நிர்வாக முறையை செம்மைப்படுத்திட, தொகுதிக்கு ஏற்றவாறு மண்டலங்கள் மறுசீரமைப்பு செய்யப்பட்டு கூடுதல் மண்டலங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 39. தானியங்கி அளவுமானிகள்

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலம் அனைத்து குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் குடிநீர் விநியோக நிலையங்களில் வழங்கப்படும் குடிநீரின் அளவை கணக்கிடுவதற்காகவும் மற்றும் குடிநீர் வழங்கும் கட்டமைப்புகளில் ஏற்படும் இழப்பை தடுப்பதற்காகவும், தானியங்கி அளவுமானிகள் (Smart Meters) பொருத்தப்பட்டு, குடிநீர் விநியோக அமைப்பை கணினி வாயிலாக கண்காணிக்கும் வசதி (SCADA) ஏற்படுத்தப்படும்.

## 40. 24 மணி நேர குடிநீர் விநியோகம்

கோடம்பாக்கம் (பகுதி 10) மற்றும் அடையாறு (பகுதி13) ஆகிய பகுதிகளில் தற்போது உள்ள குடிநீர் விநியோக அமைப்பை மேம்படுத்தி, 24 மணி நேர குடிநீர் விநியோகத்தை உறுதி செய்வதற்காக, ரூ 1958.25 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

## 41. கழிவுநீர் சேகரிப்பு அமைப்பு

பகுதி 10, கலைஞர் கருணாநிதி நகரில் உள்ள அண்ணா பிரதான சாலையில் நிலவும் கழிவுநீர் கட்டமைப்பில் உள்ள குறைபாடுகளுக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில், அசோக் நகர் கழிவு நீரகற்றும் நிலையத்திலிருந்து, நெசப்பாக்கம் கழிவுநீரகற்றும் நிலையம் வரை உள்ள கழிவுநீர் சேகரிப்பு அமைப்பு ரூ 31.53 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

## 42. குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

சென்னை பெருநகரின் சரிவிகித குடிநீர் வழங்குதலை உறுதிசெய்யும் பொருட்டு, தற்போதுள்ள அனைத்து குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் குடிநீர் விநியோக நிலையங்களையும் இணைத்து குழாய் வளைய அமைப்பு (Ring Main System) ஏற்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்

## 43. சென்னை பெருநகர பகுதிக்குட்பட்ட கிராமங்கள் மற்றும் நகரங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள்

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும (CMDA) பகுதியில் விவசாயத்திற்காக உருவாக்கப்பட்ட பல நீர்பாசன ஏரிகளின் ஆயக்கட்டு, நகரமயமாதல் காரணமாக படிப்படியாக குறைந்து வருவதால். சென்னை பெருநகர பகுதிக்குட்பட்ட கிராமங்கள் மற்றும் நகரங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும்.

## 44. சென்னையில் பாதாள சாக்கடை திட்டம்

ஆலந்தூர் பகுதியில் (பகுதி 12) கழிவுநீர் கட்டமைப்பில் அடிக்கடி ஏற்படும் பழுதுகளால், பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதால், தற்போதுள்ள கழிவுநீர் அமைப்புகளை மேம்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

## 45. சென்னையில் பராமரிப்பு இயந்திரங்கள்

சென்னை பெருநகரிலுள்ள கழிவுநீர் கட்டமைப்புகளை பராமரிப்பதற்காக, கூடுதலாக 90 ஜெட்ராடிங் இயந்திரங்கள், 71 தூர்வாரும் இயந்திரங்கள் மற்றும் 23 அதிவேக உறிஞ்சும் இயந்திரங்கள் ஆகியவை ரூ 54.60 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

## 46. கூட்டு குடிநீர் திட்டங்கள்

அரியலூர், பெரம்பலூர், திருச்சி, கோயம்புத்தூர், திருப்பூர், நாமக்கல், சேலம், நீலகிரி, செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், திருவள்ளூர் மற்றும் கடலூர் ஆகிய 13 மாவட்டங்களில் உள்ள 39 கூட்டு குடிநீர் திட்டங்களில் 1,512 குடியிருப்புகளில் உள்ள 14.12 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் ரூ 269.50 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 47. திருச்சி மாவட்டம் குடிநீர் திட்டம்

திருச்சி மாவட்டம், அந்தநல்லூர் ஒன்றியம் பெட்டவாய்த்தலை ஊராட்சியிலுள்ள 3 ஊரகக் குடியிருப்புகளில் 5,100 மக்கள் பயன்பெறும் வகையில் ரூ 3.29 கோடி மதிப்பீட்டில் ஒரு குடிநீர் திட்டமும், மணிகண்டம், முசிறி மற்றும் மண்ணச்சநல்லூர் ஒன்றியங்களிலுள்ள 272 குடியிருப்புகளுக்கு காவிரி மற்றும் கொள்ளிடம் ஆறுகளை நீராதாரமாகக் கொண்டு ரூ 214 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்களும் செயல்படுத்தப்படும்.

## 48. கன்னியாகுமரி மாவட்டம் குடிநீர் திட்டம்

கன்னியாகுமரி மாவட்டம், குருந்தன்கோடு ஒன்றியம் முட்டம் ஊராட்சியைச் சார்ந்த 3 குடியிருப்புகளுக்கும் மூஞ்சிறை ஒன்றியம் தூத்தூர் ஊராட்சியைச் சார்ந்த 5 குடியிருப்புகளுக்கும் ரூ 5.13 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்

## 49. பெரம்பலூர் மாவட்டம் கூட்டுக் குடிநீர் திட்டம்

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை ஒன்றியத்தைச் சார்ந்த 15 ஊரகக் குடியிருப்புகளுக்கு வெள்ளாற்றை நீராதாரமாகக் கொண்டு ரூ 11.75 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும்.

## 50. செங்கல்பட்டு மாவட்டம் கூட்டுக் குடிநீர் திட்டம்

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் ஒன்றியத்தில் உள்ள கோவளம் மற்றும் 10 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில், தையூர் ஏரியை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ 12.10 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

## 51. திருநெல்வேலி மாவட்டம் கூட்டுக் குடிநீர் திட்டம்

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்த வாகைக்குளம் மற்றும் 12 ஊரகக் குடியிருப்புகளுக்கு தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர் திட்டம் ரூ 10.54 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

## 52. நாமக்கல் மாவட்டம் கூட்டுக் குடிநீர் திட்டம்

நாமக்கல் மாவட்டம் எலச்சிப்பாளையம், மல்லசமுத்திரம் மற்றும் பரமத்தி ஒன்றியங்களுக்குட்பட்ட 547 ஊரகக் குடியிருப்புகளுக்கு இராசிபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் மொத்த ஒதுக்கீடு செய்யப்பட்ட குடிநீரை நீராதாரமாகக் கொண்ட புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ 261 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

## 53. தஞ்சாவூர் மாவட்டம் கூட்டுக் குடிநீர் திட்டம்

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர், திருவையாறு மற்றும் தஞ்சாவூர் ஒன்றியங்களைச் சார்ந்த 214 ஊரகக் குடியிருப்புகளுக்கு கொள்ளிடம் ஆற்றை நீராதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ 297 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

## 54. செயல்திறன் குறைவான மின் மோட்டார்கள் மாற்றி அமைத்தல்

மின்சார செலவினத்தை குறைக்க, முதற்கட்டமாக தலைமையிடம் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் உள்ள 495 மின் மோட்டார்களின் செயல் திறன் ஆய்வு செய்யப்பட்டு மிகக் குறைந்த செயல் திறன் கொண்ட 57 மின்மோட்டார்கள் ரூ 5.95 கோடியில் புதிதாக மாற்றி அமைக்கப்படும்.

## 55. நவீன குடிநீர் அளவுமானிகள்

ஊரகப் பகுதிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவு குடிநீர் வழங்குவதை உறுதிசெய்யும் வகையில், பராமரிப்பிலுள்ள 39 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களிலும் மற்றும் செயலாக்கத்திலுள்ள 9 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களிலும் ரூ 20 கோடி மதிப்பீட்டில் 1415 நவீன குடிநீர் அளவுமானிகள் (Smart Meters) பொருத்தப்படும்.

## 56. ஆய்விற்கு எடுத்துக் கொள்ள உத்தேசிக்கப் பட்டுள்ள திட்டங்கள்

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி, கொள்ளிடம், செம்பனார்கோவில், குத்தாலம் மற்றும் மயிலாடுதுறை ஒன்றியங்களைச் சார்ந்த 1,042 ஊரகக் குடியிருப்புகளில் உள்ள 9.11 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கொள்ளிடம் ஆற்றை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திருவள்ளூர் மாவட்டம், பூண்டி, கடம்பத்தூர் மற்றும் வில்லிவாக்கம் ஒன்றியங்களை சார்ந்த 89 குடியிருப்புகளில் உள்ள 37,815 மக்கள் பயன்பெறும் வகையில் நேமம் ஏரியை புனரமைத்து அதனை நீராதாரமாகக் கொண்ட புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் மற்றும் வள்ளியூர் ஒன்றியங்களில் உள்ள 360 ஊரகக் குடியிருப்புகளுக்கு தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.